**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8073005

C

1. District : சென்னை மாவட்டம் | PS: CC-I V&AC. காவல்நிலையம் | Year: 2018 ஆண்டு | FIR No.: 11/AC/2018/CC-I மு.த.அ. எண் | Date: 29-11-2018 08.00 hrs. நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act. 1988. | Sections பிரிவுகள்: 7 of PC Act. 1988.
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : 27.11.2018 நாள் முதல் | Date to : 28.11.2018 நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : 19.00 hrs நேரம் முதல் | Time to : 11.00 hrs நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28.11.2018 | Time நேரம் : 18.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time நேரம் :

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 7 km வடமேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி வளசரவாக்கம் ஆற்காடு ரோடு, HDFC Bank Opposite, Lamech School opposite.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : T. தங்கதுரை குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் | (b) Father's/ ~~Husband's Name~~ : தங்கராசு தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 33/2018 நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : Indian நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : ஒப்பந்த மேற்பார்வையாளர் தொழில் | (g) Address : எண். 57, ஜக்கம்மாள் தெரு, சாலிகிராமம், சென்னை. முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. ஐயப்பன், வளசரவாக்கம் போக்குவரத்து காவல் ஆய்வாளர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு T. [signature] 29.11.18

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 29.11.18

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29.11.2018 – 09.00 Hrs

Name: பெயர் P. JEYA BHARATHI
Rank: நிலை Inspector of police No. எண்
V&AC, CC-I, Chennai-16.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

முதல் தகவல் அறிக்கை Column -12 :

I received the complaint from one T. Thangadurai, M/A 33/18, S/o. Thangarasu, No. 57, Jakkammal Street, Saligramam, Chennai on 28.11.2018 at 18.00 hrs. which runs as follows:- 28.11.2018, அனுப்புனர், T. தங்கதுரை M/A-23, S/O தங்கராசு, எண்-57, ஜக்கம்மாள் தெரு, சாலிக்கிராமம், சென்னை, பெறுநர், உயர்திரு ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை மாநகரபிரிவு-1, ஆலந்தூர், சென்னை-16. ஐயா,எனக்கு சொந்த ஊர் கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டிக்கு அருகில் உள்ள நடுக்குப்பம் கிராமம். நான் எண்-57 ஜக்கம்மாள் தெரு, சாலிக்கிராமம் என்ற விலசாத்தில் தற்காலிகமாக எனது குடும்பத்துடன் தங்கி கொண்டு சக்தி கன்ஸ்டிரக்ஷன் என்ற நிறுவனத்தில் Site In charge ஆக பணிபுரிந்து வருகிறேன். இந்த நிறுவனம் Erode ஐ சேர்ந்ததாகும். இந்த நிறுவனத்தில் சென்னை அலுவலகம் சக்தி கன்ஸ்டிரக்ஷன் போரூர் கார்டன் Phase-II போரூர் என்ற விலாசத்தில் இயங்கி வருகிறது. எங்கள் நிறுவனம் சென்னை ஆற்காடு ரோட்டில் உள்ள ஸ்ரீதேவி குப்பம் பிரதான சாலை சந்திப்பில் இருந்து மெகா மார்ட் சாந்தி ரோடு சந்திப்பு வரை உள்ள பகுதியில் மழைநீர் வடிகால் கால்வாய் (Strom Water Drainage) பணியை சென்னை மாநகராட்சியில் சுமார் ரூ.32 கோடிக்கு ஏலத்திற்கு எடுத்து கடந்த 2016 பிப்ரவரி முதல் 2018 செப்டம்பர் வரை பணி மேற்கொண்டு அதை முடித்து 2018 அக்டோபரில் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைத்தது. Final Bill Settlement சுமார் ரூ.50 லட்சம் சென்னை மாநகராட்சியில் இருந்து வர வேண்டி இருப்பதால் சென்னையில் நான் தான் அந்த Bill Settlement விபரங்களை பார்த்துக கொண்டு இருக்கிறேன். எங்கள் கம்பெனி முதலாளி திரு.திருநாவுக்கரசு என்பவர் வாரத்திற்கு 1 முறை சென்னைக்கு வந்து செல்வார். கடந்த வாரம் அதாவது 15.11.2018 முதல் ஏற்பட்ட கஜா புயலின் தாக்கத்தில் சென்னையில் காற்று சற்று அதிகமாக வீசியதால் நாங்கள் செய்த Rain water Drainage Project-ல் சிறு குப்பைகள் catch pit-ல் அடைத்து விட்டதாக Corporation செயற்பொறியாளர் தகவல் சொன்னதின் பேரில் நான் மற்றும் எனது கம்பெனியில் பணிபுரியும் கோபால கிருஷ்ணன், தினேஷ் ஆகியோர் கடந்த 19.11.2018 அன்று இரவு அந்த அடைப்பு பணியை சீர் செய்து கொண்டிருந்தோம். அப்போது வளசரவாக்கம் போக்குவரத்து காவல் ஆய்வாளர் திரு.ஐயப்பன் அவர்கள் சுமார் இரவு 01.30 மணி வாக்கில் நாங்கள் பணி செய்து கொண்டிருந்த செட்டிநாடு Hardware அருகில் உள்ள இடத்திற்கு வந்து என்னை பார்த்து ஏன் என்னிடம் அனுமதி பெறாமல் எப்படி இரவு வேலை செய்து கொண்டிருக்கிறாய் என கேட்டார். நான் உடனே சிறு அடைப்பு தான் சுமார் 1 மணி நேரத்தில் சரி செய்து விட்டு கிளம்பி விடுவோம் இல்லையெனில் மழைபெய்தால் நீர் தேங்கி விடும் என்று கூறினேன். அதற்கு அவர் தன் ஜீப்பை விட்டு இறங்கி நான் வைத்திருந்த இரண்டு சக்கர வாகனம் TN-33BH 2283 Bajaj Platina BLK Chrome 100 CC என்ற வாகனத்தின் சாவியை என்னிடம் கேட்டார். நான் கொடுத்தேன். பிறகு அவர் அவர் ஜீப்பில் அவருடன் வந்த உதவி ஆய்வாளர் அவர்களிடம் வண்டியை கொடுத்து எடுத்துச் செல் என்று கூறினார். அவரும் வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டார். நான் அவரிடம் ஏன் வண்டியை எடுத்துச செல்கிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் பதில் ஏதும் சொல்லாமல் தனது ஜீப்பில் ஏறி கிளம்புவதற்கு முன் என்னிடம் மறுநாள் காலை அவரது அலுவலகத்தில் எனது Owner –உடன் வந்து பார்க்குமாறு சொல்லி சென்று விட்டார். அதன்படி மறுநாள் 20.11.2018 அன்று நான் அவரது அலுவலகம் உள்ள இடமான சௌத்திரி நகர் சென்று பார்த்தபோது அன்று அவர் அவரது அலுவலகத்தில் இல்லை. பின்பு இது சம்மந்தமாக நான் தகவலை 20.11.2018 எனது Owner-க்கு Phone மூலம் தெரிவித்தேன். அவர் வேறு வேலை காரணமாக வெளியூரில் இருப்பதால் என்னை மீண்டும் போக்குவரத்து

காவல் ஆய்வாளரை பார்த்து வண்டியை திரும்பிப் பெறச் சொன்னார். நான் அதன்பின்னர் அவசர வேலை காரணமாக இருந்ததால் நான் போக்குவரத்து காவல் ஆய்வாளரை சென்று பாக்கவில்லை மீண்டும் 27.11.2018 அன்று மாலை அவரை சந்திப்பதற்காக அவரது அலுவலகம் சென்ற போது அவர் வளசரவாக்கம் HDFC பேங்க் எதிரில் வாகனத்தணிக்கையில் இருப்பதாக தகவல் சொன்னதன் பேரில் சுமார் இரவு 7 மணிவாக்கில் அங்கு சென்று எனது மோட்டர் பைக்கை திரும்பித்தருமாறு போக்குவரத்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.ஐயப்பன் அவர்களிடம் கேட்டேன். அதற்கு அவர் என்னிடம், எங்கள் கம்பெனி அவரிடம் அனுமதி இல்லாமல் மழைநீர் கால்வாய் பழுது நீக்கும் பணி செய்து விட்டதாகவும் அதனால்தான் எனது கம்பெனி மோட்டார் சைக்கிளை எடுத்துச் சென்றுவிட்டதாகவும், மோட்டார் சைக்கிளை திரும்பத் தரவேண்டும் எனில் தனக்கு ரூபாய்.10,000/- தரவேண்டும் என்று கூறினார். அதற்கு நான் அவரிடம் அவ்வளவு பணம் கொடுக்கக்கூடிய நிலைமையில் நான் இல்லை. எங்கள் Owner-ம் வெளியூரில் இருப்பதாக கூறினேன். அவர் மீண்டும் என்னிம் நாளை காலை அதாவது 28.11.2018 தன்னை வந்து பார்க்கும் படி கூறினார். அதன் பேரில் ஆற்காடு ரோட்டில் உள்ள லாமெக் பள்ளி அருகில் சுமார் காலை 11.00 மணிக்கு சந்தித்து என்னிடம் பணம் இல்லை என்றும் எனது கம்பெனியை சேர்ந்த இரண்டு சக்கர வாகனத்தை திரும்பத் தருமாறு கூறினேன். அதற்கு அவர் ரூ.10,000/- தரமுடியாவிட்டால் ரூ.2000/- குறைத்துக்கொண்டு ரூ.8000/- தனக்கு கொடுத்து விட்டு வண்டியை பெற்றுச செல் என்று சொன்னார். மேலும் அந்த பணத்தை நாளை 29.11.2018 அன்று தனது அலுவலகத்தில் வந்து தன்னிடம் கொடுக்க வேண்டும் என்றும் அவ்வாறு அலுவலத்தில் இல்லாவிட்டால் தான் ஆற்காடு ரோட்டில் ஏதாவது ஒரு point-ல் நின்று கொண்டிருப்பேன் என்றும் நான் எங்கிருக்கிறேன் என்று தெரிந்து கொண்டு அந்த இடத்திற்கு வந்து பணத்தை தரும்படி சொன்னார். அவர் கேட்கும் பணம் லஞ்சம் எனத் தெரியவந்தது. இது பற்றி எனது Owner -யிடம் தெரிவித்தேன். அவர் மேற்படி போக்குவரத்து காவல் ஆய்வாளர் மீது சட்டபடி நடவடிக்கை எடுக்க ஆவண செய்யும் படியும் கேட்டுக் கொண்டதாலும் எனக்கும் மேற்படி லஞ்ச பணம் கொடுக்க விருப்பம் இல்லாததாலும், என்னிடம் ரூ.8000/- கேட்கும் வளசரவாக்கம் போக்குவரத்து காவல் ஆய்வாளர் திரு.ஐயப்பன் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து எனது கம்பெனி மோட்டார் சைக்கிள மீட்டுத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். அவர் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை மூலம் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்கு தகுந்த ஒத்துழைப்பு அளிப்பேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். (கையொப்பம்)

I received the above complaint on 28.11.2018 at 18.00hrs and after conducting Preliminary Enquiry, I register a case in Vigilance and Anti –Corruption, Chennai City – I Detachment in Cr.No.11/AC/2018/CC –I u/s. 7 of Prevention of Corruption Act, 1988 today on 29.11.2018 at 08.00 taken up for investigation. I herewith submit the original F.I.R and the complaint to the Hon'ble Chief Judicial Magistrate Cum Special Court, Tiruvallur. I also forward the copy of F.I.R to the officer's concerned.

(signature) 29.11.2018

**INSPECTOR OF POLICE,**
**Vigilance and Anti - Corruption**
**Chennai - City - I Dett,**
**Chennai - 16.**